**தலைப்பு 320 - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய வருடத்திற்கான அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காத அவதானிப்புக்கள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1.1. | திணைக்களத்திற்குத் தனியான வருமான தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல். | 1.6.2. (அ) (i) |
| 1.6.1.2. | குறித்த நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படுதல். | 2.1 |
| 1.6.1.2.(அ)(ஆ)(இ) | குறித்த சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல்.<br>நிலையான சொத்து ஆவணம் சரியாக பராமரிக்கப்படுதல். | 1.6.2 (ஆ) |
| 2.1. | முற்பணக் கடன் மீதி விரைவில் அறவிடப்படுதல். | 3.5(ஐ)(ஓ) |
| 2.2 | விரைவில் பற்றுக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல். | 2.4. (ஆ) |

| | | |
|---|---|---|
| 2.3. (ஆ) | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல். (கட்டுநிதி) | 2.8. |
| 3.2.2. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல். | 3.2. |
| 3.3 (ஆ) | விரைவில் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | 3.3 (உ) |
| 3.3. (இ) | சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | 3.3 (க) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 07 ஆம் திகதிய SA/SD/1/Circular இலக்கம் கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 03/2023 இன் மூலம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பி'' கணக்குக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த படிவம் திருத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் முற்பண ''பி'' கணக்கு அந்த திருத்தப்பட்ட படிவத்தினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் புதிய படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். மேலும் 2024 ஆம் ஆண்டின் இறுதி கணக்கினைத் தயாரிக்கும் போது புதிய படிவத்தின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்குமாறு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அரச கணக்கீட்டு வழிகாட்டலின் பிரகாரம் முற்பணக் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானப் பெறுவனவு

திணைக்களத்திற்கு உரிய வருமானப் பெறுவனவுகளைக் கணக்கீடு செய்யும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கால்நடை விவசாய மற்றும் ஏனைய, இசை மற்றும் நடனம், பாதுகாப்பு சேவைகள், நிர்மாணம் மற்றும் பராமரிப்பு சேவைகள் போன்ற வருமானங்களில் இருந்து திணைக்களம் ஒவ்வொரு வருடத்திலும் வருமானத்தினைச் சேகரிப்பதுடன், மீளாய்வாண்டும் அந்த வருமான மூலங்களில் இருந்து மொத்தம் ரூபா. 1,547.8 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் ஈட்டப்படும் இந்த வருமானத்தினைக் கணக்கீடு செய்வதற்கு அரச நிதி கொள்கை திணைக்களத்திடம் வினவி தனியான வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது இந்தத் திணைக்களத்தினை மீளமைப்பு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனால் மற்றும் அது தொடர்பான திட்டம் தயாரிக்கப்படுகின்றது என்பதால், வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் நடைமுறையில் சாத்தியமல்ல என்பதைத் தெரிவிக்கின்றேன். | வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2022 ஜுன் 12 ஆம் திகதி ரூபா 720,000 ஆன தொகைக்கு சிவப்பு பச்சையரிசி 4,500 கிலோ கிராம் மற்றும் ரூபா 480,000 ஆன தொகைக்கு வெள்ளை பச்சையரிசி 3,000 கிலோ கிராம் தியத்தலாவை இராணுவ முகாம் பயிற்சிப் பாடசாலைக்கு விற்பனை செய்ததன் மூலம் உகன படையணிக்கு கிடைக்க வேண்டிய ரூபா. 1,200,000 தொகையும், 2022 திசெம்பர், 2023 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் மகாஓயா படையணி அங்கத்தவர்களுக்கு வெள்ளை உருண்டை அரிசி 12,014 கிலோ கிராம் விற்பனை | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் சரியாக இனம் காணப்பட்டு அறிக்கையிடுவதற்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான ஏடு இற்றைப்படுத்தப்பட்டு தகவல் ஒழுங்கமைப்பு ஒன்றினைப் பேணுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றேன். | அனைத்து செயற்திட்ட வருமானங்களும் இற்றைப்படுத்தப்பட்டு சரியாக கணக்குகளில் இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தமைக்காக இராணுவ சேவை வனிதையர் பிரிவின் மூலம் மகாஓயா படையணிக்கு கிடைக்க வேண்டிய ரூபா. 1,063,047 ஆன தொகை மற்றும் வெலிசரை படையணி, 2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் நெல், தானியம் மற்றும் ஏனைய படையணி உற்பத்திகளுக்காக இலங்கை அரசாங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா. 62,758,801 ஆன தொகையும் கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன், அந்த கிடைக்க வேண்டிய மொத்த தொகையான ரூபா. 65,021,848 செயற்திட்டப் பிரிவினால் இனம் காணப்பட்டு அறிக்கை இடப்படாத காரணத்தால் 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், அதற்கு அமைய நிலுவை வருமானத் தொகை அந்த தொகைகளினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iii) | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலுவை வருமானத்திலிருந்து முறையே ரூபா. 122,000, ரூபா 274,000 மற்றும் ரூபா. 147,000 என நிலுவையாக இருந்த ரூபா. 543,000 ஆன வருமானம் பல்வேறு காரணங்களினால் நிறுவனத்தினால் அறவிடப்பட முடியவில்லை எனத் தெரிவித்து நிலுவை வருமான மீதிகளில் குறைக்கப்பட்டு காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வருமானத்தினை நீக்குதல் அல்லது கைவிடுதல் நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானமாகக் காட்டப்பட்டிருந்த அறவிடப்பட முடியாத மீதிகள் நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் வருமானத்தினை நீக்குதல் அல்லது கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தேவையான அறிவுரை தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வருமானத்தினை நீக்குவதாயின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

நிதிக் கூற்றுகளுக்கு உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளைக் கணக்கீடு செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 1 ஏக்கர் 3 ரூட் 16.48 பேர்ச்சஸ் கொண்ட குருகல படையணி பயிற்சிப் பாடசாலைக் காணி , மீளாய்வாண்டிலும் மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டதனால் அந்த காணியின் பெறுமதியான ரூபா. 1,100,000 இனால் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்தப் பெறுமதி திணைக்கள ஏடுகளில் இருந்து அகற்றப்பட்டு திணைக்களக் காணி மீதியினைத் திருத்துவதற்குக் குறித்துக் கொண்டுள்ளேன். | சரியான பெறுமதி நிதிக் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ii) | உரிமையினைப் பெற்றுக் கொண்டு முடிவுறுத்தப்பட்டிருந்த 6 ஏக்கர் 4 ரூட் 30.98 பேர்ச்சஸ் கொண்ட பொலனறுவை வெலிகந்த தலைமையகக் காணி ரூபா. 3,600,000 இற்கும் மற்றும் 15.4 பேர்ச்சஸைக் கொண்ட அம்பாறை உகன சமங்கல வலயக் காணி ரூபா. 500,000 இற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ACA 6 இல் உள்ளீடு செய்யப்பட்டிருக்காததுடன், அதற்கு அமைய நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா. 4,100,000 இதனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு நிதிக் கூற்றில் குறித்த மதிப்பீட்டுப் பெறுமதி கட்டடங்களின் (9151) கீழ் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றினுள் வெளிப்படுத்துவதற்குக் குறித்துக் கொண்டுள்ளேன். | சரியான பெருமதி நிதிக் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உரிமையைப் பெற்றுக் கொண்டிருந்த 11 ஹெக்டயர் பரப்பளவினைக் கொண்ட 21 காணித் துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் காணிப் பெறுமதி அல்ல என்பதுடன், குறித்த வளாகத்தில் காணப்படும் கட்டடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன். அந்த பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்காக சமர்ப்பிக்கும் போது 2023 ஆம் | மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | |
| (iv) | போக்குவரத்துப் பிரிவிலிருந்து வழங்கப்பட்டிருந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 134,124,000 பெறுமதியான 58 வாகனங்கள் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ACA 6 கூற்றில் உள்ளீடு செய்யப்பட்டிருக்காததுடன், அதற்கு அமைய அந்தத் தொகையினால் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்தக் கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 58 வாகனங்களிடையே, 43 வாகனங்கள் தொடர்பான கணக்கீடு செய்தல் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு நிறைவடைவதற்கு முன்னர் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய வாகனங்கள் தொடர்பில் பரீட்சிப்பு செய்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து வாகனங்களினதும் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (v) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய திணைக்களத்துக்குச் சொந்தமாக 341 துவிச்சக்கர வண்டிகள் உள்ளன எனக் காட்டப்பட்டுள்ள போதிலும் அந்த துவிச்சக்கர வண்டிகளின் பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் மூலம் திணைக்களத்தின் துவிச்சக்கர வண்டிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | துவிச்சக்கர வண்டிகளின் பெறுமதிகளைச் சரியாகக் கணக்குகளில் உள்ளீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (vi) | 2022 ஆம் ஆண்டில் ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதி ரூபா. 2,314,614,772 ஆக உள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதி ரூபா. 1,761,457,769 ஆகும். அதற்கு அமைய ரூபா. 553,157,003 இனால் அந்தப் பெறுமதி குறைவாக இருந்ததுடன், அந்த வித்தியாசத்தின் காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணினி ஒழுங்கமைப்பினுள் குறைவாக உள்ளீடு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகள் சொத்துக்கள் கணினி ஒழுங்கமைப்பிலிருந்து அகற்றப்பட்டு, பௌதீக மீதி மீண்டும் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு ஒப்பாய்வு செய்யப்பட்ட பௌதிக மீதி அனைத்தையும் கணினி ஒழுங்கமைப்பிற்குள் காலப்பகுதியினுள் உள்ளடக்குவதற்கு | அனைத்து ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய சரியான பெறுமதி கணக்குகளில் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடியாதிருந்தது. இந்த அவதானிப்பிற்குக் காரணமாக இருந்தது அந்த முரண்பாடே என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். திருத்தப்பட்ட ஏனைய மீதிகளை விரைவில் கணினி ஒழுங்கமைப்பில் உள்ளீடு செய்யப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**(இ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கடன் மற்றும் முற்பண ஏடு**<br><br>2017 ஜூலை 05 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 256/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண ஏட்டினைத் தயாரித்திருக்காததுடன் கணணி விரிதாள் துணையுடன் கடன் மீதி மற்றும் அறவீடுகள் குறித்துக்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் CC10 கடன் ஏடு மற்றும் முற்பண ஏடு என்பன கையினால் (Manual) பேணப்பட்டு செல்லாததுடன், கணணி விரிதாள் துணையுடன் கடன் மீதி மற்றும் அறவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.<br>அதற்கு காரணமாக உள்ளது சுமார் 32,000 ஐ அண்மித்த நபர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளமையே என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>எதிர்காலத்தில் CC10 கடன் ஏடு, பி பேரேடு என்பவை உள்ளடங்கிய கணனி மென்பொருளைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 2017 ஜூலை 05 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 256/2017 கொண்ட அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சி. சி. 10 படிவம் மற்றும் அந்த படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண ஏடு என்பன தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுகளில் நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைக்கு அமைய பாதுகாப்பு சேவை மற்றும் செயல் திட்டங்கள் மூலம் சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வு ஆண்டு இறுதியில் ரூபா. 133,700,136 திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டி இருந்தது. அதில் பாதுகாப்பு சேவைக்காக ரூபா. 11,143,453 கிடைக்க வேண்டி இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த வருமானத்தினை அளவிடத் திணைக்களம் தவறி 01 வருடம் தொடக்கம் 06 வருடத்திற்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | வழக்கு தொடுத்தல், நிறுவனத்துடன் கலந்துரையாடுதல் போன்ற நடவடிக்கைகளைத் தீர்ப்பதற்கு காணப்படும் நிலுவை மீதிகள் தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்படுதல் வேண்டும். |

**2.3 செலவின முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் தர்க்க ரீதியில் எதிர்பார்க்கப்படக்கூடிய அனைத்து சேவைகளும் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதற்கும் அவற்றை நிதியாண்டில் தமது திணைக்களத்துக்கு நிறைவேற்றக்கூடிய திறன் உள்ளது என்பதற்கும் மற்றும் மதிப்பீடு முடிந்த வரையில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனம் எடுக்க வேண்டிய போதிலும் , திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு மாற்றல் வேறுபாடானது 23 சதவீதத்திற்கும் 133 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் பரந்திருந்தது. | ஏற்றுக்கொள்ளுகின்றேன். 2023 நிதியாண்டிக்கு உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது 2022 ஓகஸ்ட் மாதத்திலேயே என்பதுடன், 2023 ஆம் ஆண்டில் எரிபொருள் செலவு அதிகரித்தமை, மின்சார கட்டணம் அதிகரித்தமை, எரிபொருள் கட்டணம் அதிகரித்தமை மற்றும் டொலரின் பெறுமதி அதிகரித்தமை என்பன உள்ளிட்ட அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த செலவு அதிக சதவீதத்தினால் உயர்ந்த காரணத்தால் அந்த நிரல் செலவு உருப்படிகள், மதிப்பீடு செய்யப்பட்டதன் வகையில் முகாமைத்துவப்படுத்த முடியாது இருந்தது | தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய செலவினை முடிந்த வரையில் முகாமைத்துவப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதனைத் தயவுடன் சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (ii) | 17 செலவு விடயங்களின் ஒதுக்கீடுகளின் மீதி 10 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையில் இருந்ததுடன், அதில் 03 செலவு விடயங்களின் ஒதுக்கீடு குறைக்கப்பட்டதன் பின்னரும் 28 சதவீதம் தொடக்கம் 79 சதவீதம் வரையிலான வீச்சில் மீதியாகி இருந்தது. மேலும், 05 செலவு விடயங்களின் ஒதுக்கீடு நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் 16 சதவீதம் தொடக்கம் 60 சதவீதம் வரையிலான வீச்சில் மீதமாகிக் காணப்படுகின்றது. | அத்தியாவசிய சேவைகளில் மட்டும் மேலதிக நேரத்தினை ஈடுபடுத்துதல், வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளை மட்டுப்படுத்துதல், போதிய அளவு கட்டுநிதி கிடைக்காமை, ஒதுக்கீட்டினை மீதப்படுத்துவதற்கு இணங்கியமை. | மதிப்பீட்டினை முடிந்த வரையில் சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட அரச கணக்கீட்டு வழிகாட்டல் இலக்கம் 05/2023 இன் 3.3 ஆம் பிரிவிற்கு அமைய அறிக்கையிடப்படும் நிறுவனத்தில் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2023/12/31 ஆம் திகதியில் கடப்பாட்டு இலக்கத்திற்கு அமைய வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டுக்கு உரிய ரூபா. 1,201,338 ஆன பொறுப்புக்கள் 2023 ஆம் ஆண்டு நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் காட்டப்பட்டிருந்த பொறுப்புக்கள் ஏடு கையால் இற்றைப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளில் மேலே கூறப்பட்ட பொறுப்புக்கள் ஏடு சிகாஸ் மென்பொருளின் ஊடாக தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் 1205 செலவு விடயத்தின் கீழான கடப்பாடுகள் இற்றைப்படுத்த முடியாது இருந்ததுடன், அவதானிக்கப்பட்ட ஏனைய செலவு விடயங்களுக்கு உரிய பொறுப்புக்கள் வருட இறுதி திகதியில் அறிக்கையிடப்படாத காரணத்தால் பொறுப்புகளாக உள்ளடக்கப்படவில்லை. | வருட இறுதியில் காணப்படும் அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா. 124,703,033 பெறுமதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியிலும் திணைக்களத்தினால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா. 124,703,033 பெறுமதியான கடப்பாடுகளை தீர்ப்பதற்காகத் திறைசேரியிடமிருந்து கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு காலம் கடந்தது என்பதனால் மார்ச் மாத இறுதியில் தீர்ப்பதற்கு முடியாது இருந்தது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | விரைவில் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | (அ) நிதிப் பிரமாணம் 103 தொடக்கம் நிதிப் பிரமாணம் 110 வரை | - | பொலனறுவை படையணியில் 2023 ஆம் ஆண்டில் NLDB விவசாய செயற்திட்டத்தில் நெல் மற்றும் சோள பயிர்ச் செய்கை சேதமடைந்தமை, பொலனறுவை படையணியின் கீழ் உள்ள மாங்கேணி மர முந்திரி செயற்திட்டத்தில் மர முந்திரி பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்து | இந்த கணக்காய்வு அறிக்கை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயல்படுவதற்கு செயற்திட்டம் மற்றும் சிவில் நிர்வாகப் பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவதானிக்கப்பட்ட சம்பவம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொஸ்பிலான் கிருமி நாசினி 100 கிராம் கொண்ட 2,603 பைக்கட்டுகள் 2023 ஜூலை மாதமளவில் காலாவதியாகி இருந்தமை, பொலனறுவை படையணியில் நாடு நெல் 20,019 கிலோ கிராம் தொகை குறைவாக இருந்தமை மற்றும் அம்பாறை படையணியின் கீழ் உள்ள லாஹுகல கரங்கோவ 2022/2023 பெரும் போகத்தில் நெல் பயிர்ச் செய்கை சேததமடைந்தமை போன்ற சேதங்களை இனம் கண்டு அவற்றுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஏடுகளில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) நிதிப் - பிரமாணம் 756(6) | 2022 ஆம் ஆண்டு பொருள் கணிப்பாய்வு அறிக்கை 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், 2022 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதாக மட்டும் கடிதம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. | இலக்கம் CSD/ACCT /09/02/2023(26) மற்றும் 2023.06.30 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பாய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1985 மே 10 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 289 மற்றும் 1992 ஓகஸ்ட் 19 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 26/92 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | - அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களில் அரச இலச்சினையைப் பொறிப்பதற்கு அல்லது ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### (i) அதிகார பலமற்ற கொடுப்பனவுகள்

திணைக்களத்தினால் அதிகார பலமற்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் திணைக்களத்தினால் மரணம் அடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் முறையே 56 பேர்களுக்கு மற்றும் 37 பேர்களுக்குக் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா. 1,107,463 உம் மற்றும் அந்தக் காலப் பகுதியிலே சேவையினைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் 55 பேருக்குக் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 1,914,647 உம் ஆன சம்பளங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்குத் தவறி இருந்தது. | மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்று உத்தியோகத்தர்களின் இறுதி மாத சம்பளம் இவ்வாறு வங்கியில் இடப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகை அவர்களது ஓய்வூதிய ய மரண பணிக்கொடை தொகையிலிருந்து அறவிடப்பட்டு எதிர்காலத்தில் இந்தத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய அந்தத் தொகை படிமுறையாக அறவிடப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சம்பளக் கொடுப்பனவு தொடர்பில் உள்ளக நிர்வாகத்தினை உறுதிப்படுத்த வேண்டியமை மற்றும் கூடுதலாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.7 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புகளில் அவதானிக்கப்பட்ட மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமையகத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டிக்கு 2022 செப்டம்பர் 17 ஆம் திகதி "ஹன்னஸ்கிரிய பிரதேசத்தில் என்ஜின் அமைப்பில் ஏற்பட்ட சேததினால் ரூபா. 323,000 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த நட்டத்தினை உரிய தரப்பினரிடம் இருந்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் ஆரம்ப விசாரணை செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதால், மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணை அறிக்கை விசாரணைப் பிரிவிடம் அனுப்பப்பட்டுள்ளது. | நட்டத்தினை உரிய தரப்பினரிடம் இருந்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வெலிசரை துணை படையணியின் மூலம் பேணப்பட்டு வந்த விசேட அரிசி செயற்திட்டத்தில் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 07 படையணிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நெல், தானிய வகைகள் மற்றும் ஏனைய படையணி உற்பத்திகளுக்கு உரியதான ரூபா. 62,758,801 ஆன தொகை இலங்கை அரசாங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டி இருந்த போதிலும், 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் அந்தத் தொகை தீர்க்கப்படாது இருந்ததுடன் அந்த பெறுமதியினைத் தீர்ப்பதற்கு போதியளவு நிதி அல்லது அரிசி இருப்பும், வெலிசரை அரிசி செயற்திட்டத்திடம் காணப்படவில்லை. | அமைச்சு மட்டத்தில் சபையொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவில் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.8 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஓகஸ்ட் 28 ஆம் திககி இடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 91 மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் 371(5) இற்கு அமைய ஏதேனும் | முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல் தொடர்பான வழிமுறை மீளாய்வு செய்யப்பட்டு நிதிப் பிரமாணத்துக்கு அமைய | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | விசேட செயற்பாட்டுக்காக வழங்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி அந்த செயற்பாடு நிறைவடைந்த உடனேயே அல்லது குறித்த செயல்பாடு நிறைவடைந்து 10 நாட்களுக்குள் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் 65 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 5,491,244 ஆன முற்பணம் 11 நாட்களுக்கும் 323 நாட்களுக்கும் இடையிலான தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த செயல்பாடு நிறைவடைந்த உடனேயே முற்பணத்தினைத் தீர்ப்பதற்கும், மீண்டும் இவ்வாறான அவதானிப்புகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) பிரிவிற்கு அமைய ஏதேனும் விசேட செயற்பாட்டிற்காக பதவி நிலை உத்தியோகத்தருக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அதிகபட்சமாக ரூபா. 100,000 வரையில் அந்நிலைமை இடைக்கால கட்டு நிதியினை வழங்கக்கூடியதாக உள்ளது என்பதுடன் நிதி எல்லையினை விஞ்ச வேண்டிய சந்தர்ப்பங்களில் திறைசேரியின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் 15 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையினை விஞ்சி மற்றும் திறைசேரியின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது மொத்தமாக ரூபா. 3,929,350 ஆன முற்பணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தில் உள்ள பதவி நிலை உத்தியோகத்தர்களின் தொகை குறைவு என்பதால் அவசரமான சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அவ்வப்போது முற்பணம் வழங்குவதற்கு நேரிட்டுள்ளது. எனினும் அவ்வாறு முற்பணத்தினை வழங்குதல் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதால் எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புகள் இடம் பெறாதிருக்க வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | முற்பணம் வழங்கும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 10 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 323,100 ஆன முற்பணத் தொகை செலவிடப்படாது 05 நாட்களுக்கும் 126 நாட்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் செயல்பாடு இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்ததன் பின்னர் முழுமையான முற்பணத் தொகையும், பணமாக தீர்க்கப்பட்டிருந்தது. | தனிநபர் பாதுகாப்பு பாடநெறி உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக வெளி நிறுவனத்தில் இருந்து பங்கு பற்றிய படைத் தரப்பினருக்கான செலவுகளை மேற்கொள்வதற்குக் கட்டு நிதியாக வழங்கப்பட்டிருந்த தொகை என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும் இந்த முறையினை மீண்டும் மீளாய்வு செய்வதற்காக | தீர்மானிக்கப்பட்ட செயற்பாட்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத் தொகை அந்த செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படவில்லை எனில் உடனடியாக முற்பணத் தொகையினை தீர்ப்பதற்கு |

| | | |
|---|---|---|
| | தற்போது அறிக்கையிடும் முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**2.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

வங்கி கணக்குகளை நிர்வகித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்கு உரிய இலக்கம் 7042755 கொண்ட வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் காணப்பட்ட ரூபா. 10,172,367 ஆன இனம் காணப்படாத 107 பெறுகை சந்தர்ப்பங்கள் 2024 ஜனவரி 31 ஆம் திகதி வரையில் இனம் காணப்படாது இருந்தன. | இந்தத் தொகையினை உடனடியாக தீர்த்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இனம் காணப்படாத 83 பெறுகைகள் வரையில் குறைக்கப்பட்டுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றேன். இவ்வாறு இனம் காணப்படாத பெறுகைகள் எதிர்காலத்தில் உடனடியாக இனம் காணப்பட்டு தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | நேரடியான மாற்றல்களை உடனடியாக இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) திணைக்களத்திற்கு உரிய இலக்கம் 7042755 கொண்ட வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் காணப்பட்ட ரூபா. 1,252,809 ஆன இனம் காணப்படாத 04 கொடுப்பனவு சந்தர்ப்பங்கள் 2024 ஜனவரி 31 ஆம் திகதி வரையில் இனம் காணப்பட்டிருக்கவில்லை. | இந்த இனம் காணப்படாத 04 கொடுப்பனவு சந்தர்ப்பங்களில் 02 சந்தர்ப்பங்கள் சரி செய்யப்பட்டுள்ளதுடன், மீதி இனம் காணப்படாத கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் மாத வங்கி இணக்கக் கூற்றில் தீர்க்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | இனம் காணப்படாத கொடுப்பனவுகளை விரைவில் இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உள்நாட்டில் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **மாங்கேணி மரமுந்திரிகை செயற்திட்டம்** | | |
| (i) | பொலனறுவை படையணிக்குச் சொந்தமான மாங்கேணி மர முந்திரிகை செயற்திட்டம் 187 ஏக்கரைக் கொண்டுள்ளதுடன் அதில் 155 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் மர முந்திரிகை மரங்கள் நடப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த நிலப் பிரதேசம் சரியான முறையில் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் ஆக்கப்படவில்லை என்பதால் பயிரிடப்பட்டுள்ள காணியில் இருந்து வருமானம், செலவு என்பவற்றின் கணக்கீட்டின் துல்லிய தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடம் இந்த மர முந்திரிகை செயற்பட்டத்தில் உள்ள காணித்துண்டு 187 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் காணித் துண்டினை அளவீடு செய்து நிலையான வேலியினை அமைப்பதற்கு மரம் முந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலத்தின் அளவு தீர்க்கமாக இனம் காணப்படுதல் வேண்டும் மற்றும் வருமானம் செலவு என்பன இற்றைப்படுத்தப்பட்டு மற்றும் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (ii) | பொலனறுவை படையணிக்குச் சொந்தமான மாங்கேணி மர முந்திரிகை செயற்திட்டத்தில் 8,787 மரமுந்திரிகை மரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தற்போது அங்கு 3,682 மரங்கள் காணப்படுகின்ற காரணத்தால் 5,105 மரங்கள் குறைவாக உள்ளதுடன் அந்த குறைபாடு தொடர்பில் நிதிப் பிரமாணம் 103, 104, 110 என்பவற்றின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மரமுந்திரிகை மரங்கள் / கன்றுகளை சரியாகக் கணக்கீடு செய்தல் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காத காரணத்தால் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே இந்த செயல்திட்டத்தில் 8,787 தொகையான மர முந்திரிகை மரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இங்கு உண்மையாக 3,682 மரமுந்திரிகைக் கன்றுகளே உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கு அமைய மர முந்திரிகை மரத் தொகைக்கு உரிய சுயவிபர ஏட்டினை பேணிச் செல்வதற்கு தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மர முந்திரிகைப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் மொஸ்பிலான் அஸிடமிபிரிட் எனும் கிருமி நாசினி 100 கிராம் கொண்ட 2,930 பைக்கெட்டுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு தற்காலிக களஞ்சியசாலையில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த அனைத்து பைக்கட்டுகளும் 2023 ஜுலை மாதத்தில் காலாவதியான காரணத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் சுமார் ரூபா. 3,123,600 ஆகும். | இந்தக் கொள்வனவு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மர முந்திரிகை பயிர்ச் செய்கை அல்லது கொண்டச்சி மர முந்திரிகை பயிர்ச் செய்கையின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இது தொடர்பில் விசாரணை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான அவதானிப்பு மீண்டும் ஏற்படாதிருக்க குறிப்பாக மர முந்திரிகை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் தொடர்பிலான தேவைப்பாடு, கொள்வனவு, பயன்பாடு, இருப்புக் கட்டுப்பாடு போன்றவை தொடர்பில் காணப்படும் முறைமைகள் முழுமையாக தனித் தனியாக மீளாய்வு செய்யப்பட்டு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டிற்காக மட்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கொள்வனவு செய்யப்படும் கிருமி நாசினிகள் சரியான காலத்தில் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | பொலனறுவை படையணியின் இருப்புப் புத்தகத்தில் மாங்கேணி துணை படையணிக்கு மொஸ்பிலான் அஸிடமிபிரிட் கிருமி நாசினி 1,980 பைக்கட்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அது மாங்கேணி துணை படையணியின் இருப்புப் புத்தகத்தில் 1,916 பைக்கட்டுகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் 64 பைக்கட்டுகள் குறைவாகக் காணப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி ரூபா. 76,800 ஆகும். | இது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு அறிக்கையினைப் பெற்றுத் தருமாறு தற்போதைய கட்டளை உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | துணை படையணியின் இருப்புப் புத்தகத்துடன் வித்தியாசம் ஏற்படாத வகையில் சரியான முகாமைத்துவத்தினை ஏற்படுத்துதல் வேண்டும். |

**(ஆ) NLDB விவசாய செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | பொலனறுவை படையணிக்குச் சொந்தமான தேசிய கால்நடை வளங்கள் சபையிடம் இருந்த 90 ஏக்கரைக் கொண்ட கல்லேல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செயற்திட்டமானது பணிப்பாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | இந்த அவதானிப்பு உள்ளிட்ட பொலனறுவை படையணியின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் உள்ளக ஆரம்ப விசாரணை சபை ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிரல் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்டங்களுக்கு எழுத்து மூலம் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | இந்தக் காணி பொலனறுவை படையணியினால் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அப்போது அதில் நெல் மற்றும் சோளம் பயிர்ச் செய்கைக்காக ரூபா. 1,395,060 செலவிடப்பட்டு ரூபா. 324,100 மட்டுமே வருமானமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா. 1,070,960 நட்டம் திணைக்களத்துக்கு ஏற்பட்டிருந்தது. | இந்த அவதானிப்பு உள்ளிட்ட பொலனறுவை படையணியின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் உள்ளக ஆரம்ப விசாரணை சபை ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிரல் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | நட்டம் ஏற்படாத வகையில் பயிர்ச்செய்கை செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(இ) லாஹுகல கரங்கோவ நெல் பயிர்ச் செய்கை செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 70 ஏக்கரில் நெல் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திலிருந்து 105,000 கிலோ கிராம் நெல் விளைச்சலும் மற்றும் அதிலிருந்து ரூபா. 12,600,000 வருமானமும் பெற்றுக் கொள்ள முடியும் என தகவல்கள் சமர்ப்பித்து திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், உண்மையாகக் கிடைத்த விளைச்சல் 24,500 கிலோ கிராம் மற்றும் அதிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா. 1,849,750 ஆக இருந்ததுடன் எட்டப்பட முடியாத இலக்கு செயற்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது | இந்தப் பிரதேசத்தில் நிலவிய அதிக வரட்சியுடனான காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை நிலத்திற்கு அண்மையில் காணப்பட்ட ஹெட ஓயா நதியும் காய்ந்த நிலையில் காணப்படுகின்றது. அதற்கமைய செயற்திட்டத்திற்குத் தேவையான நீரினைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது. செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கும்போது | நடைமுறையில் எட்டக்கூடிய விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத் தலைமையகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கை மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க ஒரு ஏக்கரில் பெற்றுக் கொள்ளக் கூடிய விளைச்சல் தொகை 1,500 கிலோ கிராம் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தில் காணப்பட்ட நெல் விலைகளுடன் ஒப்பிட்டு விலை ரூபா. 120 எனக் கொண்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இந்த பயிர்ச் செய்கை செயற்திட்டம் தொடர்பில் தவறான பயன்பாடு அல்லது முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதனைக் கண்டறிவதற்கு என்னால் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதன் அறிக்கைக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும், மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ii) | நெல் பயிர்ச் செய்கை செயற்திட்ட திட்டத்திற்கு அமைய 64 படை வீரர்களை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உண்மையாக செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு 74 படைவீரர்களை ஈடுபடுத்தி இருந்ததனால் முறையான அனுமதியின்றி கூடுதலாக படை வீரர்கள் 10 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், செயற்திட்டத்திற்காக ரூபா. 21,528,146 செலவு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வருமானம் ரூபா. 1,849,750 என்பதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா. 19,678,396 ஆகும். | செயற்திட்ட முன்மொழிவில் செயல்திட்டத்திற்காக 64 படைவீரர்கள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாட்டின் அடிப்படையில் 01 ஏக்கருக்கு ஒரு படை வீரர் என 70 படை வீரர்கள் மற்றும் 04 கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் எனும் ரீதியில் 74 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விசேட கடமைகளுக்கு வெளியே சென்று மீண்டும் அலுவலகத்தில் மேலதிகமாக இருந்த படைவீரர்கள் மேலதிகமாக இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நட்டம் ஏற்படாத வகையில் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்து வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் கையேட்டில் 7.11.1 இல் விலைமனு மதிப்பீட்டு அறிக்கை எனும் பந்திக்கு அமைய அனைத்து விலை மனுதாரர்களுக்கு, தொழில்நுட்ப விபரக் குறிப்புகளில் முக்கியமான விபரக் குறிப்புகளுக்கு விலை மனுதாரர்களின் இணக்கப்பாட்டினை சுட்டிக்காட்டும் அட்டவணை ஒன்று விலைமனு மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் ரூபா. 5,907,940 செலவில் நான்கு பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத்தகைய அட்டவணை ஒன்று தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டலுக்கு அமைய விலைமனு மதிப்பீட்டில் மற்றும் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் வழிகாட்டல் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கணக்காய்விற்கு உறுதி கூறுகின்றேன். இதற்காகப் பெறுகை பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் விளையாட்டு ஆடைகளைக் கொள்வனவு செய்யும் பெறுகையின் போது ஆகக் குறைந்த விலை மனுதாரர் மற்றும் ஆகக்கூடிய விலை மனுதாரர் ஆகியோர் சமர்ப்பித்திருந்த கூறு விலைகளினிடையே, ரூபா. 1,328,154 வரையிலான பாரிய விலை வீச்சு ஏற்பட்டிருந்தது. இவ்வாறு விலை வீச்சு ஏற்படுவதற்குக் காரணம் பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் (இ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரக் குறிப்பு விடய அறிவினைக் கொண்ட குழுவின் மூலம் தயாரிப்பதற்கான வழிவகை தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | பெறுகைகள் கையேட்டில் 7 ஆம் பிரிவின் பிரகாரம் விலை மனு மதிப்பீட்டுக் கட்டங்களினுள், விலைமனு ஆவணத்தில் தீர்க்கமாக குறிப்பிடப்பட்டிருக்காத மதிப்பீட்டுக் காரணிகளை விலைமனு மதிப்பீட்டின் போது பயன்படுத்தப்படலாகாது | பெறுகைகள் வழிகாட்டலுக்கு அமைய விலை மனு மதிப்பீட்டின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பொறுப்புக்கள் மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் தொடர்பில் | பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் மீளாய்வாண்டில் ரூபா. 4,760,172 பெறுமதியான இரு பெறுகைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலைமனு மதிப்பீட்டின் போது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்காத மதிப்பீட்டுக் காரணிகளை விலைமனு மதிப்பீட்டுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு பெறுகைகள் பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| **(ஈ)** | மீளாயவாண்டில் ரூபா 2,229,195 செலவில் கிளாஸ் கிளீனர் மற்றும் எயார் ∴பிரெஷ்னர் ஸ்பிரே என்பவற்றைக் கொள்வனவு செய்கையில் விலை மனு ஆவணங்களை பொருள் அலகு ஒன்றில் அடங்கி இருக்க வேண்டிய திரவ அளவு குறிப்பிடப்பட்டிருக்காத காரணத்தால் விலை மனுதாரர்களினால் பல்வேறு அளவுகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அளவுகள் மாறுபடுதல் விலை மனு மதிப்பீட்டின் போது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புகள் ஏற்படாது இருக்கவும் தேவைப்பாடுகளைத் தீர்க்கமாக விலை மனு ஆவணங்களில் உள்ளடக்குவதற்கும் தேவையான அறிவுரைகள் பெறுகை பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | விலைமனு ஆவணம் தயாரிக்கும் போது விபரக் குறிப்பினை முழுமையாகத் தயாரிப்பதற்கு பெறுகைக்குழு பொறுப்பேற்றல் வேண்டும். |
| **(உ)** | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து தொடர்புடைய செலவுகள் உள்ளிட்ட முழுமையான மொத்த செலவு மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் ரூபா. 4,111,542 செலவிடப்பட்டு 77 கனொன் டோனர்கள் கொள்வனவு செய்தமைக்கு உரியதான, முழுமையான மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட முழுமையான மொத்த செலவு, தனியான ஆவணமாகத் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், எதிர்காலத்தில் முன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படும் போது விபரக் குறிப்புடன் சரியான மொத்த செலவு மதிப்பீட்டினை சரியாக உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேவையான அறிவுரை பெறுகைகள் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டில் ரூபா. 4,838,293 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு வில்பத்து படையணியில் ஆடை தொழிற்சாலைக்குக் கட்டடப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது 9 விலை மனுதாரர்களினால் விலை மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 4 விலை மனுதாரர்கள் சமர்ப்பித்திருந்த கூறு விலைகள் பணிப்பாளரினால் (செயல்படை கொள்முதல்) கையொப்பமிடப்பட்டிருந்த மற்றும் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த விலை மனு ஆவணத்தினைப் பயன்படுத்துவதற்கு பதிலாக வேறு படிவத்தில் விலை மனு ஆவணம், விலை மனு சமர்ப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு விலை மனு மதிப்பீட்டின் போது அது தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி கூறுவிலைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மனு ஆவணங்களில் பிரிவொன்றினை உள்ளடக்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூறுவிலை கோருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட விலை மனு ஆவணங்களைப் பயன்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்குப் பிரிவினால் ரூபா. 69,310,000 இற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த 6 பிரதேசங்களில் அமைந்துள்ள 176 ஏக்கர் 3 ரூட் 39.5 பேர்ச்சஸ் கணக்குகளில் காணப்பட்ட போதிலும் திணைக்களத்திடம் அவ்வாறான 6 காணித் துண்டுகள் இல்லை என நிர்வாகப் பிரிவு வழங்கியிருந்த தகவல்களுக்கு அமைய அவதானிக்கப்பட்டது. | கண்டறிந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு, இந்த சொத்துக்கள் பொது 287 படிவத்திற்கு அமைய சரி பிழை பார்க்கப்பட வேண்டியதுடன் அதற்காக சபை ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வருடாந்த பொருட்கள் கணிப்பாய்வின் மூலம் காணி மற்றும் கட்டடங்கள் ஒப்பாய்வு செய்யப்படுவதில்லை என்பதனால் தங்களது அவதானிப்பு தொடர்பில் விசேட கவனத்தினை செலுத்தி மேலே | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கூறப்பட்ட சபையின் மூலம் செயல்பட்டு அறிக்கையொன்றினை விரைவில் வழங்குவதற்கும், அதற்கமைய தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | கணக்குப் பிரிவினால் ரூபா. 198,846,000 இற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த 4 பிரதேசங்களில் அமைந்துள்ள 4 காணித் துண்டுகள் 121 ஏக்கர் 2 ரூட் 33.12 பேர்ச்சஸ் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிர்வாகப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய அந்த காணித் துண்டுகளின் மொத்த நிலப்பரப்பு 33 ஏக்கர் 2 ரூட் 35.48 பேர்ச்சேஸாக உள்ளதுடன் அதற்கு அமைய 88 ஏக்கர் அளவினால் நிலப்பரப்பில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கண்டறிந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு, இந்த சொத்துக்கள் பொது 287 படிவத்திற்கு அமைய சரி பிழை பார்க்கப்பட வேண்டியதுடன் அதற்காக சபை ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலே கூறப்பட்ட சபையின் மூலம் செயல்பட்டு அறிக்கையொன்றினை விரைவில் வழங்குவதற்கும், அதற்கமைய தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2.17 ஹெக்டெயரான சேருபிட்ட படையணி காணி மற்றும் சமூர்த்தி மாவத்தை, பழைய மதவாச்சி, எலபாத்த பெயரில் 4 ஏக்கர் காணி கணக்குப் பிரிவினால் ரூபா. 13,400,000 மற்றும் ரூபா. 1,500,000 இற்கு கணக்கீடு செய்திருந்த போதிலும் இந்த காணிக்கான மதிப்பீட்டு பெறுமதி நிர்வாகப் பிரிவினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கண்டறிந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு, இந்த சொத்துக்கள் பொது 287 படிவத்திற்கு அமைய சரி பிழை பார்க்கப்பட வேண்டியதுடன் அதற்காக சபை ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலே கூறப்பட்ட சபையின் மூலம் செயல்பட்டு | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையொன்றினை விரைவில் வழங்குவதற்கும், அதற்கமைய தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஈ) | கணக்குப் பிரிவினால் பளுகஸ்வங்குவ, சிரிபுர எனும் பெயரில் 1 ரூட் 28.4 பர்ச்சேஸ் காணி ரூபா. 513,000 இற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்வாகப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய ஸ்ரீ புர துணை படையணியின் நிலப்பரப்பு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கண்டறிந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு, இந்த சொத்துக்கள் பொது 287 படிவத்திற்கு அமைய சரி பிழை பார்க்கப்பட வேண்டியதுடன் அதற்காக சபை ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலே கூறப்பட்ட சபையின் மூலம் செயல்பட்டு அறிக்கையொன்றினை விரைவில் வழங்குவதற்கும், அதற்கமைய தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | திணைக்களத்தினால் நீண்ட காலம் தொட்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த 554 காணித் தொண்டுகளில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 30 காணி துண்டுகளுக்கு உரிய 21.086 ஹெக்டயர் அளவான காணியினை மட்டுமே கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மீதி 524 காணித்துண்டு தொகைகளை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | தற்போது அவதானிக்கப்பட்ட காணிகளைக் கையகப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சட்ட ரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதிகூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA 6 கூற்றில் ரூபா. 740,456,671 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் 579 வாகனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது எனினும் போக்குவரத்து பிரிவினால் வழங்கப்பட்டிருந்த வாகனப் பட்டியலில் 502 வாகனங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா. 100,345,435 பெறுமதியான 135 வாகனங்கள் போக்குவரத்து பிரிவினால் வழங்கப்பட்டிருந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு இருக்காதுடன், அந்த வாகனங்கள் தொடர்பான தகவல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | போக்குவரத்துப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளிலும் காணப்பட்ட 444 வாகனங்களுள் ரூபா. 140,135,000 பெறுமதியான 82 வாகனங்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் | வாகனங்களின் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஐ) | ACA 6 இனுள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காத போக்குவரத்துப் பிரிவில் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட 58 வாகனங்களில் 38 வாகனங்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 108 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் போக்குவரத்துப் பிரிவிடம் காணப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வாகனங்களின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படுதல் வேண்டும். |
| (ஒ) | போக்குவரத்துப் பிரிவில் விபரங்கள் உள்ளடக்கப்படாத ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட 135 வாகனங்களில் 78 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகன அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட 71 வாகனங்கள் ACA 6 இலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வாகனங்களின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் கணக்குகளில் திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | இதற்கமைய போக்குவரத்துப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு என்பவற்றில் பேணப்பட்டு வரும் இரு ஆவணங்களிலும் உள்ளடக்கப்படாது மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 128 வாகனங்கள் காணப்பட்டதுடன், இதில் 108 வாகனங்கள் (போக்குவரத்துப் பிரிவில் விபரங்கள் காணப்படாத) திணைக்களத்தில் காணப்படுகின்றன என்பதற்கான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் இதுவரையில் உரிமையை பெற்றுக் கொள்ளாத மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 43,410,000 ஆன 40 வாகனங்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு வாகனமான இலக்கம் GA-4428 கொண்ட வாகனம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் திணைக்களத்திற்குச் சொந்தமாயிருத்தல் வேண்டும். |
| (ஔ) | திணைக்களத்தினால் இதுவரையில் உரிமையைப் பெற்றுக் கொள்ளாத மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 43,410,000 ஆன 40 வாகனங்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் இலக்கம் GA-4428 கொண்ட வாகனம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ACA 6 இல் உள்ளடக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவினால் அறிக்கையிடப்பட்டுள்ள வாகனங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் மற்றும் பதிவு விபரங்கள் பரீட்சிப்பு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வாகனங்களின் தகவல்கள் சரியாக திணைக்களத்தில் பேணப்பட்டு வருதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (க) பல்வேறு அமைச்சுக்களுக்கு மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான 36 வாகனங்கள் திணைக்களத்தினால் நீண்ட காலம் தொட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது எனினும், அந்த வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையில் கையகப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 22 ஆகும். 14 வாகனங்களின் விபரங்கள் இல்லை என்பதைத் தெரிவிக்கின்றேன். தற்போது அகற்றப்பட வேண்டிய நிலைமையில் உள்ள வாகனங்களில் இன்னமும் கையகப்படுத்தப்பட வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை 27 ஆகும். அவற்றின் உரிமை காணப்படும் அரச நிறுவனங்களுக்கு அகற்றுவதற்காக ஒப்படைப்பதற்கு செயல்பட்டு வருகின்ற வாகனங்கள் 05 உள்ளதுடன் சபையொன்றின் மூலம் இந்த நடவடிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 இன் பிரகாரம் திணைக்களத்தில் பிணை வைப்புச் செய்யப்பட வேண்டிய 07 நிறைவேற்றுப் பதவிகளுக்கு மற்றும் 02 இரண்டாம் நிலை பதவிகளுக்கு உரிய 70 உத்தியோகத்தர்களுக்கு குறித்த பிணைத் தொகை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் மாதங்களில் பிணை வைப்பு செய்து நிறைவு செய்யப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாஓயா படையணியின் கீழ் பக்கி எல்ல உபவலயத்தில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பேணப்பட்டு வந்திருந்த செங்கல் செயற்திட்டங்களில் ஏற்பட்டிருந்து 762,322 செங்கல் குறைபாட்டினால் ரூபா. 5,447,590 ஆன நட்டம் திணைக்களத்துக்கு ஏற்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா. 2,255,672 ஐ மட்டுமே அறவிட்டுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது எனினும் ரூபா. 3,191,918 ஆன மீதித் தொகையினை அறவிடுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது. | இதுவரையிலும் ரூபா. 3,242,165 ஆன தொகை அறவிடப்படுவதற்கு உள்ளது. மேலும், இந்த அறவீடு தொடர்பில் முறையான அனுமதி கிடைக்கும் வரையில் அறவிடுதலைத் தற்காலிகமாக இடை நிறுத்துமாறு இலக்கம் MOD/CSD/CSD/03/08/1 கொண்டதும் மற்றும் 2024.01.31 ஆம் திகதி இடப்பட்டதுமான பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அமைச்சின் அனுமதி கிடைத்ததன் பின்னர் மீதித் தொகையினை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | மீதித் தொகையினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கதிர்காம படையணி தலைமையகத்தில் 16 அடி அகலம் மற்றும் 903 அடி நீளமும் கொண்ட பிரதான உள்ளக வீதி ஒழுங்கமைப்பை 2016 ஆம் ஆண்டில் கொங்கிரீட் இட்டு புதுப்பிப்பதற்காக பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீமெந்து, கல், மணல் உள்ளிட்ட நிர்மாணப் பொருட்கள் கதிர்காம படையணி தலைமையகத்திற்கு கிடைத்திருக்காததுடன், அந்த வீதியின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படாது இருந்ததால் ரூபா. 579,124 நட்டம் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா. | பொறுப்புக் கூற வேண்டிய இராணுவ உத்தியோகத்தர்களிடம் இருந்து மீதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட இலக்கம் சிஎஸ்டி/1/1/2/8( ) கொண்டதும் மற்றும் 20223.12.14 ஆம் திகதி இடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் இராணுவ தளபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்தத் தொகை அறவிடப்பட்டதன் பின்னர் தங்களுக்கு அறிக்கை | மீதித் தொகையினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 144,781 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | இடப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி அளவில் இன்னமும் உரிமை கையகப்படுத்தப்படாத மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காத 524 காணித் துண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த கட்டடங்களின் பெறுமதி ரூபா. 746,203,209 ஆகும். மேலும் இவ்வாறு கையகப்படுத்தப்படாத காணியான வில்பத்து படையணியிலும் மீளாய்வாண்டில் மீண்டும் கட்டட நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா. 16,156,769 ஆகும். | இதற்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் காணியின் உரிமையைத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | உஹன மற்றும் மகாஓயா படையணிகளினால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தியத்தலாவை இராணுவ பயிற்சிப் பாடசாலைக்கு மற்றும் சேவா வனிதா அலகிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த படையணி உற்பத்திகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,263,047 ஆன தொகையை குறித்து நிறுவனங்களிடம் இருந்து அறவிட்டு இலங்கை அரசாங்கத்திற்கு தீர்ப்பதற்கு குறித்த படையணி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீட்டினை மேற்கொள்ளுவதற்கு அமைச்சு மட்டத்தில் சபையொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | விரைவில் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | தேவைப்பாடு சரியான முறையில் இனம் காணப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 76 வகைகளுக்கு உரியதான நீர்க் குழாய் உபகரணங்கள் 2,291 உருப்படிகள் 15 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டும் , 2021 ஆம் ஆண்டில் ரூபா. 304.400 பெறுமதியான 2,000 பொலிஸெக் பைகள் ஒரு வருடத்திற்கும் அதிக காலம் தொட்டும், சேருபிட்ட களஞ்சியசாலையில் பயன்பாடின்றி காணப்படுகின்றது. | இந்தப் பயிற்சிப் பாடசாலை உள்ளிட்ட படையணி மற்றும் பயிற்சிப் பாடசாலைகள் அனைத்திலும் உள்ள மேலதிகம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் பிரகாரம் செயல்பட்டு, மேலதிக உருப்படிகளைத் தேவைப்பாடு உள்ள இடங்களுக்கு வழங்குதல் மற்றும் இன்னமும் பயன்பாட்டற்ற உருப்படிகளை முறையான நடைமுறைகளுக்கு அமைய விலைக் கேள்வி வழங்குவதற்கு நடவடிக்கை | பயனுள்ள ஆயுட்காலத்தினை விஞ்சுவதற்கு முன்னர் பயன்படுத்துவதற்கும் கொள்வனவு செய்வதற்கு முன்னர் தேவைப்பாட்டினை சரியாக இனம் காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுப்பதற்குத் தேவையான வழிவகைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஊ) | சேருபிட்ட படையணிக்கு உரிய செயல்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட லொரி ஒன்று திருத்த வேலைகளுக்காக 2022 நவம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைக்கு அமைய ஆகக் குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த தனியார் நிறுவனத்தினால் ரூபா. 1,250,000 தொகைக்கு மேற்கொள்ளுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1. இன் பிரகாரம் ரூபா. 500,000 ஐ விஞ்சிய சேவைகளுக்கான பெறுகைகளின் போது ஒப்பந்தக்காரர் மற்றும் பெறுகை நிறுவனம் என்பவற்றுக்கிடையே,<br>மேற்கொள்ளப்பட்ட முறையான எழுத்து மூல ஒப்பந்தம் இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், திருத்த வேலைகளுக்காகப் பணிப்பாளரின் (போக்குவரத்து) அனுமதி இன்றி 2022 நவம்பர் 17 ஆம் திகதி லொரியானது தெரிவு செய்யப்பட்ட கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2024 மார்ச் 20 ஆம் திகதி வரையிலும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாது இருந்தது. வாகன திருத்த வேலைகளுக்கான சரியான முகாமைத்துவம் இல்லாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | மேலே கூறப்பட்ட லொரியின் திருத்த வேலைகளுக்கான ஒப்பந்த வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் செலவிடப்படும் தொகையுடன் ஒப்பிடும் போது பயனுள்ள ஆயுட் காலத்தினை எதிர்பார்க்க முடியாது என்பதனால், பொருத்தமான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக சபையொன்று நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அனுமதியினை எதிர்பார்த்து அல்லது திருத்த வேலைகளுக்கு வழங்கி நீண்ட காலம் வாகனத்தை கராஜில் நிறுத்தி வைப்பதை தவிர்த்துக் கொள்ளுவதற்காக தற்போது திருத்த வேலை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை மாதாந்தம் நடாத்துவதற்குத் தேவையான அறிவுரைகள் போக்குவரத்துப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் வாகன திருத்த வேலைகள் சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | திணைக்களத்திற்குச் சொந்தமான படையணி, பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூலம் பயன்பாட்டில் இருந்து விலக்கப்பட்ட 113 வாகனங்களை அகற்றுவதற்காக சேருபிட்ட படையணி தலைமையகத்தில் நிறுத்தி | இந்த விடயம் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் | வாகனங்களை அகற்றுதல் திணைக்களத்திற்கு அனுகூலமற்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு முன்னர் விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்ததுடன், இந்தப் படையணிக்கு இந்த வாகனங்கள் கிடைத்திருந்தது 2018 - 2023 காலப் பகுதியினுள் ஆகும். இந்த வாகனங்கள் நீண்ட காலமாக அகற்றப்படாது காணப்படுவதனால் பாரிய அளவில் சேதமடைந்து இருந்ததுடன் கணக்காய்வு தினமான 2024 மார்ச் 20 ஆம் திகதி வரையிலும் இந்த வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச உடமையாக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அறிவுரைகளை எதிர்பார்த்து தாமதம் ஏற்பட்டிருந்தது என்பதனைக் குறிப்பிடுகின்றேன். தற்போது பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விலைக் கேள்வி கோரப்பட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும். |
| (ஏ) | வெலிசாரை படையணியின் களஞ்சிய சாலையில் 05 வருடம் தொடக்கம் 20 வருடம் வரையில் பழமையான விநியோகிக்கப்படாது இருக்கும் 31 உருப்படி சீருடைகளும், 02 வருடம் தொடக்கம் 08 வருடம் வரையில் பழமையான விநியோகிக்கப்படாது இருக்கும் 268 அலகு டயர் மற்றும் டியூப்களும், 04 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடைப்பட்ட விநியோகிக்கப்படாது இருக்கும் 93 கட்டடப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்களும், 05 வருடத்திற்கும் 13 வருடத்திற்கும் இடைப்பட்ட விநியோகிக்கப்படாதிருக்கும் 17 உருப்படிகளான எழுது கருவிகள், டோனர் மற்றும் கணினி உதிரிப் பாகங்கள் 26,417 அலகுகளும் பயன்பாடு இன்றி காணப்பட்டன. இதில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 20 உருப்படி சீருடைகளின் பெறுமதி ரூபா. 5,946,501 உம் 21 வகையிலான கட்டடப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்களின் பெறுமதி ரூபா. 762,809 உம் மற்றும் 195 அலகு டயர் மற்றும் டியூப்களின் பெறுமதி ரூபா. 2,310,917 உம் ஆகும். | மிகை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் பிரகாரம் செயல்பட்டு, மிகை உருப்படிகளைத் தேவைப்பாடு உள்ள இடங்களுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும், இன்னமும் பயன்பாடு இன்றி இருக்கும் உருப்படிகளை முறையான நடைமுறைக்கு அமைய விலைக் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான வழிவகைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது மிகையான டயர் தொடர்பில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி ஒருவரை பெற்றுக் கொண்டு திணைக்களத்தில் தேவைப்பாடு காணப்படும் டயர் மற்றும் டியூப் தொகைகளை மட்டும் இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் மீதி இருப்பினைப் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய முப்படைகளுக்கும் மற்றும் போலீஸ் திணைக்களத்திக்கும் அரச நிறுவனங்களுக்கிடையிலான பரிமாற்றல் அடிப்படையில் | தேவைப்பாட்டினை சரியாக இனம் கண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இருக்கும் உபகரணங்களை உற்பத்தித் திறனான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஐ) | பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விதைக்கான தேவைப்பாடு சரியாக மதிப்பீடு செய்யப்படாது விதை கொள்வனவு செய்தலும், சரியான காலத்தில் பயிர் செய்யாமை மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை போன்று காரணங்களினால் மீளாய்வாண்டில் ரூபா. 1,067,202 பெறுமதியான 8 விதை வகைகளுக்கு உரிய 2,112 கிலோ கிராம் விதைகள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டது. | களஞ்சிய சாலையில் காணப்படும் மெதுவாக விநியோகிக்கப்படும் இந்த இருப்பின் எதிர்கால தேவைப்பாடுகளுக்காக மீண்டும் கட்டளை இடப்படாத வகையிலும் இந்த இருப்பின் மூலம் ஆகக் கூடிய பயனை மதிப்பீடு தயாரிக்கும் போது பயன்படுத்துமாறும் முறையான அறிவுரை பெறுகை பணிப்பாளர் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | தேவைப்பாட்டிற்கு மட்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | செயற்திட்டப் பிரிவின் எழுத்து மூல கட்டளையின் பிரகாரம் படையணிகளினால் நெல் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான கட்டளை இன்றி பொலனறுவை படையணிக்கு சொந்தமான 75,150 கிலோகிராம் நெல் தொகை தனியார் அரிசி ஆலைக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா. 7,890,750 ஆகும். | எதிர்காலத்தில் அனைத்து விவசாய உற்பத்திகள் அல்லது வேறு படையணி உற்பத்திகளின் விற்பனையானது செயற்திட்ட பிரிவின் எழுத்து மூலமான அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்வதற்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் நெல்லை அரிசியாக்குதல் தொடர்பான ஆலோசனைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்ட பிரிவின் எழுத்து மூல கட்டளையின் பிரகாரம் படையணிகளில் இருந்து நெல் விநியோகித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | பொலனறுவை படையணியின் இருப்பு ஏடுகளுக்கு அமைய நாடு நெல் 98,539 கிலோ கிராம் காணப்பட்டது எனினும் நியமிக்கப்பட்ட சபையினால் நெல் இருப்பு எடையிடும்போது களஞ்சியசாலையில் இருந்த உண்மையான இருப்பு 85,035 கிலோ கிராம் என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய 14,504 கிலோ கிராம் நெல் குறைவு என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பெறுமதி ரூபா. 1,675,067 | எடையிடப்படும்போது ஏதேனும் தவறு அல்லது கணக்கீடு செய்யும் போது தவறுதல்கள் இடம்பெற்று இருக்கக்கூடும் என்பதை அவதானிக்கின்றேன். எவ்வாறு இருப்பினும் நாடு நெல் 14,504 கிலோ கிராம் அளவில் குறைவடைதல் தொடர்பில் தற்போது சபையின் மூலம் பரீட்சிப்பு செய்யப்படுகின்றது என்பதனைத் தயவுடன் | அறுவடை செய்யப்பட்ட விளைச்சலை பாதுகாப்பாக களஞ்சிய படுத்தப்பட வேண்டும் மற்றும் குறைவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும். மேலும், பொலனறுவை படையணியின் இருப்பு ஏட்டிக்கு அமைய சம்பா நெல் 11,054 கிலோ கிராம் காணப்பட்டது எனினும் நியமிக்கப்பட்ட சபையினால் நெல் தொகை எடையிடப்பட்ட போது களஞ்சிய சாலையில் இருந்த உண்மையான இருப்பு 11,585 கிலோ கிராம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது என்பதால் சம்பா நெல் 531 கிலோ கிராம் மிகையாக காட்டப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா. 55,746 ஆகும். இந்த குறைபாடு மற்றும் மிகை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனம் காணப்பட்டிருக்கவில்லை. | தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஔ) | நிலுவையாக இருந்த மீதிகளிடையே மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 155,492 ஆன 2 வருடங்களை விடப் பழமையான கடன் மீதியும், ஓய்வூதியம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,475,631 ஆன 2 வருடங்களை விடப் பழமையான கடன் மீதியும், சேவையை கைவிட்டுச் சென்றிருந்த 53 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய 5 வருடங்களை விடப் பழமையான ரூபா. 4,141,473 ஆன கடன் மீதியும், 2 - 5 வருடங்கள் வரையில் பழமையான 78 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 7,635,965 ஆன கடன் மீதியும் காணப்பட்டது. அதற்கு அமைய இந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கான போதியளவு முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. | மரணமடைந்த மற்றும் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ஓய்வுவூதிய பணிக்கொடையிலிருந்து கழிக்கப்பட்டு இந்தத் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், ரூபா. 155,492 கடன் மீதி உத்தியோகத்தரின் கோரிக்கையின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் சுட்டிக்காட்டுகின்றேன். முற்பண பி கணக்கு தொடர்பில் காணப்படும் நிலுவை மீதி அறவீட்டை பரீட்சிப்பு செய்து அந்தக் கணக்கை முறைப்படுத்துதல் மற்றும் சரியாக பேணிச் செல்வதற்கு பணிப்பாளர் நாயகத்தினால் இலக்கம் சிஆதெ/1/1/3/18() கொண்டதும் 2022.08.17 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த சபையினால் தற்போது | நிலுவை கடன் மீதியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒற்றை மீதி பட்டியலில் காணப்படும் பிழைகள் பெரும்பாலும் தீர்க்கப்பட்டு முடிவடைந்துள்ளது என்பதனால் அந்த ஒற்றை மீதியை அறவிடுவதற்கு வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (க) | 102 உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அறவிடுவதற்கு காணப்பட்ட மொத்தம் ரூபா. 14,904,310 ஆன கடன் மீதியை ஆண்டினுள் அறவிடுவதற்கு தவறி இருந்ததனால் அந்த ஆரம்ப கடன் மீதி அவ்வாறாகவே வருட இறுதியிலும் முற்பண மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் இறுதியாக இணைக்கப்பட்டுக் கடமையாற்றிய சேவை நிலையத்தின் கட்டளையிடும் உத்தியோகத்தர் மூலம் குறித்த கடன்பட்டோர் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கடன்பட்டோருக்கும் உரிய பிணையாளரின் சம்பளத்திலிருந்து தவணை ரீதியில் அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டிய சேமலாப நிதியம், யகசாதக மற்றும் சுவசவிய நிதிய பிரிவிடம் இருந்து இந்தப் படைவீரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை இருக்குமானால் அதன் மூலம் அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன் மீதியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |